திரு. கே. டி. கோசல்ராம்: சார் தேர்தல் முடிந்து இவ்வளவு காலம் வரை அந்த உபாத்தியாயர்களுக்குப் பிரயாணப்படி கொடுக்காமல் தடைப்பட்டதற்கு உண்மையான காரணம் என்ன? எதனால் இவ்வளவு கால தாமதம் ஏற்பட்டது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நான் எப்பொழுதும், இந்த மன்றத்திலும் சரி, வெளியிலும் சரி, பொய்யான காரணங்களைச் சொல்வதில்லை. நான் சொன்னபடி 325 பேரில் இன்னும் 14 பேர்களுக்குத்தான் இன்னும் இந்தப் பிரயாணப்படி கொடுக்கப்படவில்லை. கடிதப் போக்குவரத்தினால் தாமதம் ஏற்பட்டிருக்கிறது.

திருமதி டி. என். அனந்தநாயகி: இவ்வாறு தேர்தல் வேலைகளுக்காக அனுப்பப்படுகிற ஆசிரியர்களுக்குத் தேர்தல் முடிந்த அன்று மாலையிலேயே அவர்களுடைய பிரயாணச் செலவைக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எவ்வளவு துரிதமாக கொடுக்க வேண்டுமோ அது கவனிக்கப்படவேண்டியதுதான். ஆனால் தவறுதல் செய்யப்பட்டு விட்டால் கொடுக்கின்றவர் கையிலிருந்து கொடுக்கும் நிமித்தம் வரும். அதையும் பரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது.

அரசாங்க பஸ்கள் (மாணவர் சுற்றுப் பிரயாணங்களுக்கு).

* *1070-இஇஇ* **கேள்வி.—திரு. ராம. அரங்கண்ணல் (திரு. முனு ஆதி சார்பாக):** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

குறைந்த கட்டண சலுகையில் பள்ளி மாணவர்களின் சுற்றுப் பிரயாணங்களுக்கு, அரசாங்க பஸ்கள் வழங்கும் உத்தேசமுண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN: The Government are already hiring out, subject to certain conditions, and availability after meting the requirements of services, buses of the **Madras State Transport Department for students' excursions on** Sundays and other holidays at the following concession rates :—

Bus up to 40 seats

1. Minimum charge of Rs. 25 per bus.
2. Detention charge of Rs. 2 per hour or Rs. 24 per day
3. Mileage charges at 75 nP. per mile.

Bus with more than 40 seats.

1. Minimum charge of Rs. 40 per bus.
2. Detention charge of Rs. 3 per hour or Rs. 36 per day.
3. Mileage charge at 87 nP. per mile.

தீப்பெட்டி உற்பத்தி சாலைகள்.

* *1070-எப்எப்எப்* **கேள்வி.—திரு. சா. ராமசாமி:** கனம் கைத் 10–30 a.m
தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நம் மாநிலத்தில் எங்கெங்கு எத்தனை தீப்பெட்டி உற்பத்தி சாலைகள் இருக்கின்றன?

(இ) தனியார் துறையிலுள்ளவை எத்தனை ?

(உ) வெளிநாடுகளிலிருந்து தீப்பெட்டியோ அல்லது தேவைப் படும் கந்தகமோ இறக்குமதி செய்யப்படுகிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) நம் மாநிலத்தில் கீழ்க் கண்டபடி 150 தீப்பெட்டி தொழிற்சாலைகள் இருக்கின்றன :—

1.	சென்னை நகரம்	1
2.	செங்கல்பட்டு மாவட்டம்	2
3.	வட ஆற்காடு மாவட்டம்	13
4.	சேலம் மாவட்டம்	5
5.	திருச்சிராப்பள்ளி மாவட்டம்	3
6.	தஞ்சாவூர் மாவட்டம்	2
7.	கோயம்பத்தூர் மாவட்டம்	2
8.	மதுரை மாவட்டம்	6
9.	இராமநாதபுரம் மாவட்டம்	77
10.	திருநெல்வேலி மாவட்டம்	36
11.	கன்னியாகுமரி மாவட்டம்	3
	ஆக மொத்தம்	150

(இ) மேற்கூறிய 150 தொழிற்சாலைகளில் 7 தொழிற்சாலைகள் கூட்டுறவுத் துறையிலும், மற்றவை தனியார் துறையிலும் உள்ளன.

(உ) வெளிநாடுகளிலிருந்து தீப்பெட்டிகள் இறக்குமதி செய்யப்படுவதில்லை. கந்தகம் இறக்குமதி செய்யப்படுகிறது.

திரு. கே. டி. கோசல்ராம் : சார், இந்த 150 தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்குமாகச் சேர்ந்து அவர்களுக்குப் பண உதவி செய்வதற்காக ஒரு கார்ப்பரேஷன் நியமித்து, அதன் மூலமாகக் கொள்முதல் செய்து விற்பனை செய்ய ஏற்பாடு செய்தால் இந்தத் தொழில் நல்ல நிலைமைக்கு வரும் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அம்மாதிரி ஒரு கார்ப்பரேஷன் ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதுபற்றி முன்பே பரிசீலனை செய்தோம். இதற்கு நிதி உதவி ரிசர்வ் பாங்கிலிருந்து கிடைக்காது என்று சொல்லிவிட்டார்கள். தனியார் கம்பெனிகள் இந்த ஏற்பாட்டைச் செய்வதில் சர்க்காருக்கு ஆட்சேபனை இல்லை யென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி டி. என். அனந்தநாயகி : சார், இராமநாதபுரத்தில் மட்டும் 77 தீப்பெட்டித் தொழிற்சாலைகள் இருக்கின்றனவே. மற்ற மாவட்டங்களில் குறைவாக இருப்பதற்குக் காரணம் என்ன ? இராமனுதபுரத்தில் இந்தத் தொழிலுக்கு ஏதாவது தனி வசதி இருக்கிறதா ? இதைப் பரவலாக எல்லா மாவட்டங்களிலும் அமைக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இராமனுதபுரத்தில் இது நீண்டகாலப் புராதனத் தொழில். அந்த ஊர் வரண்ட பிரதேச மாக இருப்பதால் தீப்பெட்டி நன்ருகச் செய்ய முடிகிறது. தீக்குச்சி எவ்வளவு சீக்கிரத்தில் காய்கிறதோ அவ்வளவு அதிக

1st November 1962]

மாகச் செய்ய முடியும். சென்னை நகரத்தில் காற்றில் நீர் (ஹயுமிடிடி) அதிகமாக இருக்கிறது. அதனால் இங்கு சுலபமாகச் செய்ய முடியவில்லை. இராமனுதபுரத்தில் திக்குச்சி செய்வதற்கான வசதி இருக்கிறது.

திரு. கே. டி. கோசல்ராம்: கார்ப்பரேஷன் ஏற்படுத்துவதற்கு ரிசர்வ் பாங்கு நிதி உதவி செய்ய ஒத்துக்கொள்ளவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவ்வாறு ஒரு கார்ப்பரேஷன் அமைப்பதில் சர்க்காருக்கு ஆட்சேபனை இல்லையென்று சொன்னார்கள். தனியார் அப்படி ஒரு கார்ப்பரேஷன் ஆரம்பித்தால் அதற்கு அரசாங்கம் என்ன உதவிகள் செய்யும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இது 'ஹைபதடிகல் க்வெஸ்டின்'. அப்பிளிகேஷன் போட்டால் பரிசீலனை செய்யப்படும்.

திரு. ஆ. கு. சுப்பையா: சென்னையில் சர்க்கார் துறையில் வைத்து நடத்திய தீப்பெட்டித் தொழிற்சாலை மூடப்பட்டதற்குக் காரணம் என்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சென்னை நகரத்தில் ஆரம்பித்த தொழிற்சாலை, தொழிற்சாலை என்ற ரீதியில் ஆரம்பிக்கப்படவில்லை. 'அன் எம்பளாய்மெண்ட் ரிலிப் ஸ்கீம்' என்ற முறையில், அதாவது வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு நிவாரணம் அளிக்கும் முறையில் நாள் ஒன்றுக்கு 12 அணு கூலி பெறும் நிமித்தம் ஆரம்பிக்கப்பட்டது. அது ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் அந்தப் பகுதியில் வேலையில்லாத் திண்டாட்டம் இருந்திருக்கவேண்டும். அப்போது, 8,000 பேர் வேலை வேண்டுமென மனுப் போட்டார்கள். வட சென்னையில் கடந்த ஐந்து ஆண்டுகளில் பல கனரகத் தொழில்கள் ஏற்பட்டு விட்டதன் காரணமாக இந்தத் தொழிற்சாலைகளில் 12 அணுவுக்கு வேலை செய்ய ஆள் கிடைக்காமல் மூடப்பட்டது. இப்போது அதைக் காஞ்சிபுரத்தில் கொண்டு போய் வைத்திருக்கிறோம்.

S.S.L.C. Examination

*1070-GGG Q.—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government are aware of the disparities between academic and secretarial courses, so far as the total marks required and the eligibility rules, in S.S.L.C Examinations under the 1959 scheme and the consequent phenomenal failures of secretarial students in the S.S.L.C. Examination?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Yes, Sir.

திரு. வை. சங்கரன்: அக்காடமிக் பாடப் படிப்பு எடுத்துக்கொண்டு படிக்கும் மாணவர்கள் வாங்க வேண்டிய மொத்த மார்க் என்ன? செக்ரடேரியல் கோர்சில் படிக்கும் மாணவர்கள் எடுக்க வேண்டிய மொத்தம் மார்க் என்ன? செக்ரடேரியல் பாட முறையில் படிக்கும் மாணவர்கள் வாங்க வேண்டிய மார்க்கை விட அக்கடமிக் பாடப் படிப்பு படிக்கும் மாணவர்கள் என் அதிக மார்க் வாங்க வேண்டுமென்று வைக்கப்பட்டிருக்கின்றது? இந்த வேறுபாட்டைத் தவிர்க்க சர்க்கார் முயற்சி செய்யுமா?